Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.417/2022

**Depositions of DW- 1**

| Name | திரு.பாண்டி | Occupation | விவசாயம் |
|---|---|---|---|
| Father's name | சின்னமுனியாண்டி | Calling | |
| Village | சாமிநத்தம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of September 2025.

<u>10.09.2025</u>

2 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் 3ம் குற்றம் சாட்டப்பட்டவர் என்றால் சரிதான். இவ்வழக்கில் 1ம் குற்றம் சாட்டப்பட்ட நபரான சின்னமுனியாண்டி எனது தகப்பனார் என்றால் சரிதான். பெரியம்மாள், க/பெ.சின்னமுனியாண்டி எனது அம்மா ஆவார். குற்றமுறையீட்டாளர் தரப்பில் பிரச்சனை நடந்ததாக கூறப்படும் இடம் சம்மந்தமாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (விருதுநகர்) அசல்வழக்கு எண்.313/2007 வழக்கு நடந்து முடிந்துவிட்டது. கடந்த 2008 ம் ஆண்டு உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்படி நிலமானது என்னுடையது என்றும், 3 மாதத்திற்குள் அ.சா.1 மேற்படி நிலத்தில் ஆக்கிரமித்திருந்த பகுதியை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது. **மேற்படி தீர்ப்பின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் எ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி தீர்ப்பிற்கு பின் 3 மாத காலத்திற்குள் அ.சா.1 மேற்படி இடத்தை என்னிடம் ஒப்படைத்துவிட்டார். மேற்படி தீர்ப்பை எதிர்த்து அ.சா.1 மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. அ.சா.1 மேற்படி இடத்தை என்னிடம் ஒப்படைத்ததிலிருந்து இன்றுவரை எனது அனுபவத்தில் தான் உள்ளது.

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

மேற்படி உரிமையியல் வழக்கானது சர்வே எண்.1392 தொடர்பாக தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் 17 ஏக்கர் இடம் உள்ளது என்றால் சரியல்ல. 12 ஏக்கர் உள்ளது. மேற்படி 12 ஏக்கரில் 3 ஏக்கரானது சுப்பிரமணிய தேவர் என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பே மேற்படி இடம் சம்மந்தமாக எங்களுக்குள் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டதால் சுப்ரமணி மேற்படி இடத்தை காலி செய்துவிட்டு சுப்ரமணி மற்றும் அவரது மகன்களான சக்கரை மற்றும் கருப்பசாமி ஆகியோர் சாமிநத்தத்திலுள்ள காளியம்மன் கோவிலருகே குடியேறி விட்டனர் என்றால், சரியல்ல. மேற்படி உரிமையியல் வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்பு அவர்கள் மேற்படி இடத்தை காலி செய்துவிட்டு சென்றார்கள். மேற்படி இடத்தை காலி செய்த பின்பு சுப்ரமணி அந்த வீட்டிலிருந்த பொருட்கள் எதையும் எடுத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி உரிமையியல் வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டதை எதிர்த்து சுப்ரமணியால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை. ஆனால் UDR ல் மேற்படி நிலம் சம்மந்தமாக மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்தார். மேற்படி நிலம் சம்மந்தமாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் நிலையுறுத்து நீதிபேராணை நிலுவையிலிருந்தபோது என்னால் JCB வாகனத்தை வைத்து மேற்படி இடத்திலிருந்த வீடானது இடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி நிலம் சம்மந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பினை இவ்வழக்கு புலன் விசாரணை அதிகாரிகளிடம் கொடுத்திருந்தால் இந்த வழக்கானது போடப்பட்டிருக்காது என்றால், ஏற்கனவே எனது தரப்பில் மேற்படி தீர்ப்பை காவலர்களிடம் காண்பித்தேன். ஆனால் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.